## 40. என்ன சொல்லி பாடுவேன்

**பல்லவி**

என்ன சொல்லி பாடுவேன்
என் அன்பு தெய்வம் இயேசுவை
எனக்காக யாவும் கொடுத்திட்டார்
தன் ஜீவனையும் கொடுத்திட்டார்

**சரணங்கள்**

1. பிதாவின் மகிமை துறந்துவிட்டார்
தேவ சாயலை வெறுத்து விட்டார் -2
மனிதனை போல மனிதனாக
அடிமை ரூபம் எடுத்து வந்தார்
- என்ன சொல்லி

2. நரிகளுக்கு குழிகளுண்டு
ஆகாய பறவைக்கு கூடு உண்டு
மனிஷகுமாரன் தலைசாய்க்கவோ
எந்த இடமும் பூமியில் இல்லை
- என்ன சொல்லி

3. சிலுவையில் என் பாடுகளை
தனது சரீரத்தில் எற்றுகொண்டார்
சிலுவை சுமந்து மரித்து விட்டார்
முன்றாம் நாள் உயிர்த்தெழுந்துவிட்டார்
- என்ன சொல்லி